சுபக்ருத் வரு வைகாசி மீ
மே - ஜூன் 2022

மலர்: 5
இதழ்: 2

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஸம்



MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com



நம்மாழ்வார் (வைகாசி - விசாகம்) ஜூன் 12 (ஞாயிறு)

சுபக்ருத் வரு வைகாசி மீ
மே - ஜூன் 2022

மலர்: 5
இதழ்: 2

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ அழிகூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:



ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

திவ்ய தேசங்களில் கொண்டாடப்படும் திருவிழாக்களை, ஆகமங்கள் – நித்யோத்ஸவம் / பக்ஷோத்ஸவம் / மாஸோத்ஸவம் / ஸம்வத்ஸரோத்ஸவம், என பலவகையாக வகுத்திருக்கின்றன. அவற்றுள் வருடம்தோறும் கொண்டாடப்படும் ஸம்வத்ஸரோத்ஸவத்தை 'ப்ரஹ்மோத்ஸவம்' என அழைப்பர். 'ப்ரஹ்மம்' என்ற வார்த்தைக்கு 'பெரிய' எனப் பொருளாம். மற்றவற்றைக் காட்டிலும் இந்த உத்ஸவம் பெரிய அளவில் கொண்டாடப்படுவதால் இப்பெயர் பெறுகிறது.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் இப்பெயர் வழங்கப்படுவதற்கு விசேஷ காரணம் ஒன்று உண்டு. அதாவது, அர்ச்சாரூபியாய் இப்பூவுலகில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு, சதுர்முக பிரமனே ஸாக்ஷாத்தாக ஆராதித்து இவ் உத்ஸவம் நடத்துவதாக ஐதிஹ்யம்; ஆக 'ப்ரஹ்மோத்ஸவம்' என வழங்கப் படுகிறது. இதனை 'மெய்விரத மான்மியம்' எனும் ப்ரபந்தத்தில் ஆசார்யவள்ளல் குறிப்பிடுகிறார் – புராணம் இதோ:

அத்திகிரியில் அருளாளப் பெருமாளைக் குறித்து தவம் செய்தார், ப்ரஹ்மா. எம்பெருமானும் அவருக்கு ஸாக்ஷாத்கரித்ததோடு மட்டுமின்றி, 'என்ன வரம் தருவோம்' என வினவினார். ப்ரஹ்மாவும்,

'சென்று மலர் பறித்து என் நாதன் சேவடிப்போது உகந்து
நன்றென நீர் சுடர் நன்முகவாசம் இலை கொடுத்து
கன்னல் இலட்டுவத்தோடு அன்னம் சீடை கறி படைத்து
பின்னும் செவித்து... பாதம் பணிய... அருள வேண்டிப் பெற்றார்.
இதனைத்தழுவி நடத்தப்படும் உத்ஸவம், 'ப்ரஹ்மோத்ஸவம்' ஆகிறது.

இக்கணக்கில் தேவப்பெருமாளுக்கு நடத்தப்படுவது 'ப்ரஹ்மோத்ஸவம்' ஆகட்டும். வேங்கடவனின் விழா, எப்படி 'ப்ரஹ்மோத்ஸவம்' ஆகும்? என மற்றவர் கேட்கலாம்; ஸ்ரீபாஷ்யகாரர் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு, பரப்ரஹ்மம் என்பது ஸ்ரீநிவாஸன்தானே! ('ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்பதல்லவோ அவர் தீர்மானித்தது).

திருமயிலை வேங்கடவனுக்கு வைகாசி மாதம் ஹஸ்தத்தில் தீர்த்தவாரி நடத்தும் வண்ணம் இவ்வுத்ஸவம் இவ்வாண்டு நிகழவிருக்கின்றது. வ்யாதி பயம் நிமித்தமாக இரண்டு வருஷங்களாக 'ஏகாந்தமாக' நடைபெற்ற இவ்விழா, இவ் வருஷம் வழக்கமான சிறப்புடன் நடத்த, எம்பெருமான் ஸங்கல்பித்திருக்கிறான். உத்ஸவத்தை ஸேவித்து இன்புற பக்தகோடிகளை அழைக்கிறோம்.

வழக்கமான சிறப்புக் கட்டுரைகள், புதிதாகத் தொடங்கப்படும் தேசிக ப்ரபந்தங்கள் விஷயமான ஆங்கிலத் தொடர் மற்றும் கீழ்காணும் விசேஷ உத்ஸவங்களின் வண்ணப்படங்கள் இவற்றுடன் இம்மாத ஸஞ்சிகை இதோ உங்கள் கையில்.

- ✓ சித்ரா பௌர்ணமி உத்ஸவம்
- ✓ தோட்ட உத்ஸவம்
- ✓ ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம்
- ✓ வஸந்த உத்ஸவம்
- ✓ பஞ்சபர்வ, வெள்ளிக்கிழமை உத்ஸவங்கள்

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

Vaikasi Vaibhavam

FROM THE DESK OF TRUSTEES

The month of Vaikasi, which completes the Vasantha Ruthu, is considered to be very auspiciou. Especially in our temple, it is during this month that the Annual Brahmotsavam to Srinivasa Perumal takes place. Brahmotsavam is among the most important festivals in a Srivaishnava temple.

It is believed that Lord Brahma performs the festival in honour of the presiding deity of the temple and so it is called 'Brahmotsavam'. We are happy to announce that the Annual Brahmotsavam (June 1 to 10 - Invitation on page 12 & 13) will be celebrated this year in our temple with usual grandeur after a two-year break due to the Covid pandemic.

Another significant celebration coming up in the month of Vaikasi is Nammazhwar Thirunakshatram (June 12).

"செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் அது எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?"
"அது அத்தைத் தின்று அங்கே கிடக்கும்."

This fabled conversation between a prospective disciple and an Acharya is a cornerstone event in our Sampradayam. Yes, it is the one involving Madhurakavi Azhwar and Nammazhwar and their relationship assumed legendary proportions in the annals of the Srivaishnava tradition.

Nammazhwar commands a unique position, a dual role, in the Srivaishnava tradition. He not only is the leader of the Azhwar clan, but is also an Acharya in the hierarchy headed by Lord Sriman Narayana. He is the most proficient among the Azhwars with 1,296 verses to his credit, a major chunk of the famed Nalayira Divya Prabandham. He performed Mangalaasaasanam to the deities of 36 Divyadesams, and all of them without visiting the temples. In fact, the deities lined up and vied with one another to bless Nammazhwar whose permanent abode was a bark of a tamarind tree situated in the temple premises of Lord Adhinathan of Azhwar Thirunagari even now.



Thotta Utsavam

During the last month, the Chithra Pournami and Thotta Utsavam were celebrated and, after a long gap, Lord Srinivasa visited the places of devotees at T. Nagar and the adjoining areas and blessed them. Then there were the 10-day Sribhashyakarar Utsavam and the three-day Vasantha Utsavam culminating in the Akshaya-Thrithiya day. The Chithirai month drew to a close with the Avathara Utsavam of the Thirumayilai Divya Dhampathis and Madhurakavi Azhwar Satrumurai.

With the ill-effects of the pandemic gradually receding, we all will hope that the forthcoming festivals at our Devasthanam are performed in a grand manner with the customary devotional flavour and fervour. ❊

ஸ்ரீ:



சுபகிருது வருட வைகாசி மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயம்
மே/ ஜூன்	வைகாசி					
15.05.2022	1	சதுர்தசி / பௌர்ணமி	ஞாயிறு	ஸ்வாதி	மாதப்பிறப்பு காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை வீதி புறப்பாடு	ஸ்ரீ N. ரங்காச்சாரி
16.05.2022	2	பௌர்ணமி / ப்ரதமை	திங்கள்	விசாகம்	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை வீதி புறப்பாடு	ஸ்ரீ R. பார்த்தஸாரதி, நங்கைநல்லூர்
17.05.2022	3	ப்ரதமை / த்விதீயை	செவ்வாய்	அனுஷம்	ஸ்ரீ நாதமுனிகள்	
18.05.2022	4	த்ருதீயை	புதன்	கேட்டை	தொண்டரடிப்பொடியாழ்வார்	
19.05.2022	5	சதுர்த்தி	வியாழன்	மூலம்	திருமால்வடை	
20.05.2022	6	பஞ்சமி	வெள்ளி	பூராடம்	காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள் புறப்பாடு	செட்டிபுண்யம் T.V. தேசிகன்
21.05.2022	7	ஷஷ்டி	சனி	உத்தராடம் / ச்ரவணம்	காலை பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள், தேசிகன் வீதி புறப்பாடு பின்பு ஆஸ்தானம், ஸேவாகாலம் சாற்றுமுறை	ஸ்ரீ T.E. ஸ்ரீநிவாஸன்
22.05.2022	8	ஸப்தமி	ஞாயிறு	அவிட்டம்	பூதத்தாழ்வார்	
23.05.2022	9	அஷ்டமி	திங்கள்	சதயம்	பேயாழ்வார். காலை திருமஞ்சனம், மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் (பதிவு)
24.05.2022	10	நவமி	செவ்வாய்	பூரட்டாதி	திருமால்வடை	
25.05.2022	11	தசமி	புதன்	உத்தரட்டாதி	திருமால்வடை	
26.05.2022	12	ஏகாதசி	வியாழன்	ரேவதி	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம், மாலை வீதி புறப்பாடு. காலை 5 மணி முதல் 5.30 மணிக்குள் பந்தக்கால் முஹூர்த்தம் (மேஷ லக்னம்)	ஏகாதசி: ஸ்ரீ K. வரதராஜன்
27.05.2022	13	த்வாதசி	வெள்ளி	அச்வினி	கடை வெள்ளி. காலை தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை உள் புறப்பாடு	ஸ்ரீ K.S. ஸேதுராமன் குடும்பத்தினர்

28.05.2022	14	த்ரயோதசி	சனி	பரணி		
29.05.2022	15	சதுர்தசி	ஞாயிறு	க்ருத்திகை	செல்வர் உத்ஸவம்	
30.05.2022	16	அமாவாசை	திங்கள்	க்ருத்திகை	அங்குரார்ப்பணம், ஸேனை நாதன் புறப்பாடு	
31.05.2022	17	ப்ரதமை	செவ்வாய்	ரோஹிணி	அதிவாஸம், மாலை த்வஜபட கருடன் புறப்பாடு	
01.06.2022	18	த்விதீயை	புதன்	ம்ருகசீர்ஷம்	ப்ரஹ்மோத்ஸவம் 1ஆம் நாள்: த்வஜாரோஹணம் விடியற்காலை 4 முதல் 4.45 மணிக்குள் (மேஷ லக்னம்)	
11.06.2022	28	த்வாதசி	சனி	ஸ்வாதி	விடாயாற்றி 1ஆம் நாள்	
12.06.2022	29	த்ரயோதசி	ஞாயிறு	விசாகம்	நம்மாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், நம்மாழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. விடாயாற்றி 2ஆம் நாள்.	
13.06.2022	30	சதுர்தசி	திங்கள்	அனுஷம்	விடாயாற்றி 3ஆம் நாள். காலை பெருமாள் திருமஞ்சனம். இரவு புஷ்ப பல்லக்கு	
14.06.2022	31	பௌர்ணமி	செவ்வாய்	கேட்டை	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம், மாலை வீதி புறப்பாடு	ஸ்ரீமதி & ஸ்ரீ S. அருண்

வைகாசியில் முக்கிய உத்ஸவங்கள்

ச்ரவணம்
மே 21
(சனி)

கடை வெள்ளிக்கிழமை
மே 27

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்
(10 நாட்கள்)
ஜூன் 1 (புதன்) முதல்
10 (வெள்ளி) வரை
கருட ஸேவை: ஜூன் 3 (வெள்ளி)
யானை வாஹனம்: ஜூன் 6 (திங்கள்)
திருத்தேர்:ஜூன் 7 (செவ்வாய்)
தீர்த்தவாரி: ஜூன் 9 (வியாழன்)

விடாயாற்றி உத்ஸவம் (3 நாட்கள்)
ஜூன் 11 (சனி)
முதல்
13 (திங்கள்) வரை
புஷ்ப பல்லக்கு
ஜூன் 13

நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
ஜூன் 12
(ஞாயிறு)

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:



தேசிகனும் திருவேங்கடமுடையானும்

ஸ்ரீ உ.வே. திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ

ராமசப்தம் போல் தேசிக சப்தமும்

ராம சப்தம் ஈரரசு படாதபடி பண்ணின மஹாவீரன் சக்ரவர்த்தித் திருமகன். தேசிக சப்தம் ஈரரசு படாதபடி பண்ணிய மஹாதீரர் நம் ஸ்வாமி ஸ்ரீதேசிகன். திருமலைக்கு சேஷாசலம், வ்ருஷாசலம், வேதாசலம், வேங்கடாசலம் என்றிவை முதலான பல திருநாமங்கள் மிக ப்ரஸித்தமானவை. திருமலையின் தர்சந மாத்திரத்தினால் ஸகல பாபங்களும் நாசமடையுமாகையால் அதற்கு வேங்கடாசலம் என்கிற திருநாமம் பொருத்தமாய் அமைந்துள்ளது. வேகம் - பாபத்தை, கடதி - நாசயதி, என்கிற வ்யுத்பத்தியால் இவ்வர்த்தம் ஸித்தம். இந்தத் திருவேங்கடத்திற்கு உடையவனானபடியால் ஸ்வாமியானபடியால் ஸ்ரீநிவாஸன் திருவேங்கடமுடையானென்று வ்யவஹரிக்கப்படுகிறான்.

திருவேங்கடமலை

கண்ணன் அடியினை எமக்குக் காட்டும் வெற்பு என்னும் பாசுரத்தில் திருமலையின் சிறப்பை மிகத் தெளிவாக அருளிச்செய்கிறார் ஸ்வாமி ஸ்ரீதேசிகன். அப்பாசுரத்தில் அருளியது பரம ஸுலபனான ஸ்ரீநிவாஸனுடைய திருவடித் தாமரைகளை எல்லா விதத்திலும் மிகவும் தாழ்ந்தவர்களான நமக்கும் ப்ரகாசப்படுத்துகிறது. க்ரூரமான கர்மங்களைப் பண்ணினவர்களுடைய புண்யம், பாபம் என்கிற இரண்டு அக்ருத்யங்களையும் நாசமாக்குகிறது. இதுதான் பரமபதம், நிச்சயம், என்று கொண்டாடும்படி விளங்காநிற்கிறது. நிர்மலங்களாய், மதுரங்களாய், எப்பொழுதும் வெள்ளைவெளேல் என்றிருக்கும் ஆகாய கங்கை, பாபநாசம் முதலிய பல தீர்த்தங்கள் நிறைந்திருக்கிறது. புண்ணியங்களுக்கு எல்லாம் இதுதான் புகலிடமென்று புகழப்படா நிற்கிறது.

பரமபதத்தில் ஸம்பவிக்கும் பரிபூர்ண ப்ரஹ்மானுபவமாகிற போகத்தை இங்கேயே கொடுக்கிறது. மேலிருந்து வரும் தேவதைகளும், கீழிருந்து போகும் மநுஷ்யர்களும், விரும்புவதாய் இருக்கிறது (இரட்டைப் பிள்ளை பெற்ற தாய் இரண்டு குழந்தைகளும் ஒரே ஸமயத்தில் ஸ்தந்யத்தைச் சாப்பிடுவதற்குப் பாங்காக இரண்டு குழந்தைகளுக்கும் நடுவில் தான் கிடப்பது போல், தேவர்களாகிற குழந்தைகளுக்கும் மனுஷ்யர்களாகிற குழந்தைகளுக்கும் நடுவில் ஸ்ரீநிவாஸன் ஸேவை ஸாதிக்கிறான்). தன்னை ஆச்ரயித்தவர்களின் ஸகல பாபங்களையும் போக்கடிக்கிறது **க்ரீம் கச்சதகாணே விகடே** என்று வேதத்தில் புகழப்பட்டிருப்பதால் வேதாசலம் என்று போற்றப்படுகிறது.

திருவேங்கடமுடையான்

ஸ்ரீ மதுரகவியாழ்வார் **அருள் கொண்டாடும் அடியவர் இன்புற அருளினான் அவ்வருமறையின் பொருள்** என்கிற பாசுரத்தில் அருள் கொண்டாடும் அடியவர் என்பதால் ஸ்ரீதேசிகனைக் குறிப்பிடுகிறார் என்பது மிகத்தெளிவு. பகவானுடைய அருளை மற்றவர்களும் கொண்டாடியிருந்தாலும் தேசிகன் மாதிரி யாரும் கொண்டாடவில்லை என்பது ஸஹ்ருதய ஹ்ருதயங்கமம். ஸ்ரீதேசிகனன்றோ அருளுக்காக **தயா சதகம்** என்று தனி ஸ்தோத்ரம் அமைத்தவர்! ஆகையால் அருள் கொண்டாடும் அடியவர் ஸ்வாமி தேசிகனே! அவரே **பராசரப்ரபந்தாதபி வேதாந்தரஹஸ்ய வைசத்யஹேது பூதை: ஸத்ய: பரமாத்மநி சித்தரஞ்ஜகதமை: ஸர்வோப ஜீவ்யை: உபப்ருஹ்மணை:** என்று நம்மாழ்வார் ப்ரபந்தத்தின் மேன்மையையும் அதன் போக்யதையையும் ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கிறாரன்றோ!

தயா சதகம்

ஒருவனை நாம் கொண்டாடுவது அவன் குணத்தையிட்டேயன்றோ? ஸ்ரீநிவாஸனின் குணங்களைக் கொண்டாடுவது ஸ்ரீநிவாஸனைக் கொண்டாடுவதே என்பதில் ஸந்தேஹமில்லை.

ஸ்ரீநிவாஸனிடத்தில் எண்ணற்ற குணங்கள் இருந்தாலும் **அவைகளை** குணமாக்கும் தயையே **ப்ரதாநமான** குணம். தயையற்றவனுடைய ஜ்ஞாந சக்திகள் பிறர்க்குத் தீங்கையே விளைவித்து தோஷங்களாகுமே தவிர **குணங்களாகா.** ஆகையால் மற்ற குணங்களையும் குணங்களாக்கும் தயையை ஸ்தோத்ரம் செய்தால் மற்ற குணங்களும் ஸ்தோத்ரம் பண்ணப் பட்டவையாகும். குணியான **திருவேங்கடமுடையானும்** ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவனாவான் என்று **கருதியே** தயா சதகத்தில் **தயையின்** பெருமையை மிகவும் விஸ்தாரமாகப் புகழ்கிறார்.

பகவான் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பது தயையினாலே, ஸம்ஹரிப்பதும் தயையினாலேயே என்கிறார். ஜகத்தைப் படைப்பது தயாகார்யம் என்பதில் ஸந்தேஹமில்லை. ஸம்ஹரிப்பது தயையினாலே என்பது எப்படிப் பொருந்தும் என்றால் பகவான் அசேதந ப்ராயர்களாக இருந்த நமக்கு நற்கார்யங்களைச் செய்வதற்கு ஸாதகமாகக் கரணகளேபரங்களைக் (தேஹேந்த்ரியங்களைக்) கொடுக்கிறான்.

நாம் அதைக் கொண்டு நல்ல கார்யங்களைச் செய்யாமல் பாப கர்மங்களையே செய்கின்றோம். இதைக் கண்ட பகவான் நமக்கு ஸம்ஹாரத்தை உண்டு பண்ணுகிறான் (தேஹேந்த்ரியங்கள் அற்றவர்களாக ஆக்குகிறான்). தேஹேந்த்ரியங்கள் இல்லாதபடியால் பாபம் செய்வதற்கு ப்ரஸக்தியில்லாமல் போகிறது. குழந்தையைத் தாயானவள் தானே ச்ரமப்பட்டு எழுப்பினாள். எழுந்த குழந்தை பாலைச் சாப்பிட்டுவிட்டு அக்கம்பக்கத்திலுள்ள குழந்தைகளைக் கடிப்பது, அடிப்பது, பெருச் சாளிப்பாழில் கை வைப்பது, நாய் வாலை பிடித்து இழுப்பது முதலிய அக்ருத்யங்களைச் செய்ய ஆரம்பித்தது. தாய்க்கு ஏனடா எழுப்பினோம் என்று ஆகிவிட்டது. எழுப்பின தாயே குழந்தையை தூளியிலிட்டுத் தூங்கப் பண்ண ஆரம்பிக்கிறாள் (புண்யம் செய்கிறவர்களுக்கு தூக்கம் ப்ரதிபந்தகம். பாபாத்மாக்களுக்குத் தூக்கமே மிகவும் நல்லது). அவ்விதமே பகவானும் தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட நம்மைத் தானே தயையினால் ஸம்ஹரிக்கிறான் என்பது மிகவும் பொருந்தும்.

தயா தேவியே! நீ ஒரு ராணி. நான் ஒரு சக்ரவர்த்தி. நம் இருவருக்கும் தான் நல்ல பொருத்தம் என்கிறார் ஒரு ச்லோகத்தில். தயை மற்ற குணங்களைத் தன் இஷ்ட ப்ரகாரம் ஆட்டிவைக்கிற படியினால் குணங்களுக்கு ராணியாகிறாள். என்னைப் போல் யாரும் பாபங்களைச் செய்யமாட்டார்களான படியால் பாபிகளுக்கு நான் தான் அக்ரகண்யன் சக்ரவர்த்தி என்று கருத்து. ஸ்ரீநிவாஸனே பாலனான தன்னை வேதாந்த தேசிக பதவியில் அபிஷேகம் செய்துவைத்து தன் மூலமாக தயாசதகத்தைப் பாடவைத்தான் என்கிறார் **வேதாந்த தேசிக பதே விநிவேச்ய பாலம் தேவோ தயா சதகமேதத் அவாதயந்மாம்** என்கிற ச்லோகத்தினால்.

❊

பராங்குசன் கிளிகண்ணி

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

1. வேதம் தமிழ் செய்தவன்டீ
   விண்ணோரிலும் சீரியன்டீ
   ஆதிப்பிரான் பாதமடி கிளியே
   அந்த பராங்குசனே கிளியே
   எந்தை பராங்குசனே...

2. மதுரகவிக் கெல்லாமுமாய்
   மாறினநம் மாறனைத்தான்
   சோறுமுதல் எல்லாமென்போம் கிளியே
   ஆறும் பேறுமவனே என்போம் கிளியே
   வேறெவர் பராங்குசனே...

3. கண்ணனவன் தாகமடி
   கொண்டதொரு நல்வடிவு
   எந்தை குலப்பதியுமானான் கிளியே
   முந்தையவன் சீர்சொல்லடி கிளியே
   சந்தை பராங்குசனே...

4. நாயகியாய் நல்தாயாராய்
   தோழியாகித் தானுமாகிப்
   பாசுரம் நமக்கே தந்தான் கிளியே
   பூசுரர் என்றே நிற்போம் கிளியே
   மாசறு பராங்குசனே ...

5. நாலு ப்ரபந்தந்தன்னில்
   நல்பரதன் நிலையே சொல்லி
   நம்மாழ்வார் நமக்கானானே கிளியே
   நம்வினைக் கடிவானடி கிளியே
   நாமம் பராங்குசனே...

6. ஏதுமறியா நம்மை
   எம்பெருமான் தாளில் சேர்த்து
   எல்லாம் பெறவே வைப்பான் கிளியே
   சொல்லெடுத்த சடகோபனே கிளியே
   வல்லவன் பராங்குசனே...

7. தீந்தமிழில் வேதாந்தத்தை
   தந்தவர்கள் யாருமுண்டோ?
   சொந்தமடி யிம்மாறனே கிளியே...
   பந்தம் அறுப்பானடி கிளியே...
   விந்தை பராங்குசனே...

8. ஆதிநாதன் குணமே பாடி
   சாதித்தது சித்தாந்தமே
   ஓதி யதிராசன் கொண்டான் கிளியே..
   பாதமுன் தலையில் கொள்வாய் கிளியே..
   நாதன் பராங்குசனே...

9. புளிய மரத்தடி யமர்ந்து
   அளியல் நம்பையல் என்பான்
   கலிவெல்லும் பராங்குசனே கிளியே..
   நலியும் நமைக்காப்பான் கிளியே..
   நலமே பராங்குசனே...

10. அடியார்க்கடியான் அன்பால்
    இடுபராங்குச கிளிகண்ணி
    கடுவினை களைசெய்யுமே கிளியே..
    கொடுத்திடும் வைகுந்தமே கிளியே..
    படிமின் பராங்குசனே...

ஸ்ரீ:



With Pranams:

N.R. Raghavachariar,

'Narayana Niketan',

34/35, West Circular Road,

Mandavelipakkam, Chennai & 600 028.

SVDD thanks Sri N.R. Raghavachariar
for sponsoring this month's issue of Desika Sandesam





தோட்ட உத்ஸவம்

















தோட்ட உத்ஸவம்



கண்ணுக்கினியன










ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம்













ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்து உன்பவளவாய் காண்பேனே. பெருமாள் திருமொழி – 4–9

ஸ்ரீய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் **நாளது சுபக்ருத் வருஷம் வைகாசி மாதம் 18ம் தேதி (01.06.2022) புதன்கிழமை முதல் ப்ரஹ்மோத்ஸவம்** ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருப்பதால், அம்மஹோத்ஸவத்தில் ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் கைங்கர்யபரர்களாயிருந்து திருமயிலை ஸ்ரீதிருவேங்கடமுடையானுடைய க்ருபைக்கு பாத்திரர்களாக ப்ரார்த்திக்கிறோம்.

27.05.2022	வெள்ளிக்கிழமை	மாலை	**கடை வெள்ளி**
01.06.2022	புதன்கிழமை	காலை	**த்வஜாரோஹணம்**
03.06.2022	வெள்ளிக்கிழமை	காலை	**தங்க கருட வாஹனம்**
07.06.2022	செவ்வாய்கிழமை	காலை	**திருத்தேர்**
09.06.2022	வியாழக்கிழமை	காலை	**தீர்த்தவாரி**

R.ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன்
தர்மகர்த்தாக்கள்

நாள்	நேரம்	உற்சவ விவரம் மற்றும் உபயதாரர்
29.05.22 (ஞாயிறு)	இரவு 8 மணி	**செல்வர் உத்ஸவம்** உபயம்: D.N.S Family
30.05.22 (திங்கள்)	இரவு 7 மணி	**அங்குரார்ப்பணம் - ம்ருத்ஸங்க்ரஹணம் (சேனைநாதன் புறப்பாடு)** உபயம்: ஸ்ரீ. N. சேஷாத்ரி
31.05.22 (செவ்வாய்)	இரவு 7 மணி	**அதிவாஸம் - த்வஜபடம் வீதி புறப்பாடு** **த்வஜபட கருட ப்ரதிஷ்டை** உபயம்: ஸ்ரீ. A.L. ரங்கமணி
01.06.22 (புதன்)	காலை காலை 6.30 மணி இரவு 8 மணி	**த்வஜாரோஹணம்** உபயம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தான அர்ச்சகர்கள் *(காலை 4.00 - 4.45 மணி மேஷ லக்னம்)* **பவழக்கால் சப்பரம்** உபயம்: ஸ்ரீ. ரகுபதி & ராம் **ஸிம்ஹ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. K. வேணுகோபாலன்
02.06.22 (வியாழன்)	காலை 6.30 மணி இரவு 8 மணி	**ஹம்ஸ வாஹனம்** உபயம்: எலக்ட்ரோரல் போர்டு திருமஞ்ஜனம் உபயம்: ஸ்ரீ. N.S. வரதாச்சாரியார் **ஸ்ர்யப்ரபை** உபயம்: 1. ஸ்ரீ. N. கஸ்தூரிரங்கன், 2. ஸ்ரீ. R. சுந்தரராகவன் 3. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன்
03.06.22 (வெள்ளி)	காலை 6.00 மணி இரவு 8 மணி	**தங்க கருட வாஹனம்** உபயம்: ஸ்ரீ. S. வரததேசிகன் குடும்பத்தினர் **ஹனுமந்த வாஹனம்** உபயம்: 1. ஸ்ரீ. R.வாசுதேவன் 2.ஸ்ரீ. C.கோதண்டம் 3. ஸ்ரீமதி சீதா ரங்கநாதன் 4. பிள்ளைபாக்கம் நரஸிம்மராகவாச்சாரி ட்ரஸ்ட்



நாள்	நேரம்	உற்சவ விவரம் மற்றும் உபயதாரர்
04.06.22 (சனி)	காலை 6.30 மணி இரவு 8 மணி	**சேஷ வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M.D. சுதர்சனம் ஐயங்கார் ட்ரஸ்ட் **சந்திர ப்ரபை** உபயம்: M/s. சுந்தரம் சாரிடீஸ்
05.06.22 (ஞாயிறு)	காலை 5.00 மணி இரவு 8 மணி	**நாச்சியார் திருக்கோலம்** உபயம்: ஸ்ரீ. R. முகுந்தன் **யாளி வாஹனம்** உபயம்: ஸ்ரீ. M. கணேசன்
06.06.22 (திங்கள்)	காலை 6.30 மணி இரவு 8 மணி	**வேணுகோபாலன் திருக்கோலம் (சூர்ணாபிஷேகம்)** உபயம்: ஸ்ரீ. V.C. முரளிதரன் **யானை வாஹனம் - (ஏசல்)** உபயம்: ஸ்ரீ. ராகவாச்சாரியார் குடும்பத்தினர்
07.06.22 (செவ்வாய்)	காலை இரவு 8 மணி	**திருத்தேர்** *காலை 3.30 - 4.15 மணி மேஷ லக்னம்* காலை 7.00 மணிக்கு புறப்பாடு உபயம்: ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) **தங்கக்கேடயம் (தோட்ட உத்ஸவம்)** உபயம்: ஸ்ரீ. K.ரங்கநாதன் குடும்பத்தினர்
08.06.22 (புதன்)	மதியம் 1 மணி இரவு 8 மணி	**திருப்பாய்ந்தாடு திருமஞ்ஜனம்** உபயம்: 1. ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா 2. திருக்கண்ணமங்கை ஸ்ரீ. S. சுந்தரராஜன் ஐயங்கார் பண்டு **குதிரை வாஹனம்** உபயம்: 1. ஒலக்கூர் ஸ்ரீ. ராஜகோபாலன் குடும்பத்தினர் 2. ஸ்ரீமதி நிர்மலா J. ஸ்ரீநிவாஸன் 3. ஸ்ரீ. K. ராமன்
09.06.22 (வியாழன்)	காலை 6.30 மணி மதியம் 12 மணி இரவு 8 மணி	**ஆள்மேல் பல்லக்கு (மட்டையடி மஹோத்ஸவம்)** **தீர்த்தவாரி** உபயம்: 1. ஸ்ரீ. S.R. ஜெகந்நாதன் 2. ஸ்ரீ. T.P. பத்மநாபன் **ஆனந்த நிலைய விமானம்** உபயம்: ஸ்ரீ. T. நாராயணன் & ஸ்ரீ. S. நாராயணன்
10.06.22 (வெள்ளி)	காலை 9 மணி மதியம் 1 மணி இரவு 8 மணி இரவு 10 மணி	**திருமஞ்ஜனம்** உபயம்: TCN Trust **த்வாதச ஆராதனம்** உபயம்: ஸ்ரீ. R. கோபாலசாமி ஐயங்கார் பண்டு **வெட்டிவேர் சப்பரம்** உபயம்: வனபோஜனம் ட்ரஸ்ட் **த்வஜ அவரோஹணம்**
(பிரதி தினம் காலை 9:30 மணிக்கு திருமஞ்ஜனம், காலை 11 மணிக்கு ததியாராதனை, மாலை 6:00 மணிக்கு பத்தி உலாத்தல், மாலை 7 மணிக்கு ததியாராதனை நடைபெறும்)		

விடையாற்றி உத்ஸவம்		
11.06.22 (சனி)	மாலை 4.30 மணி	**திருமஞ்ஜனம்** உபயம்: 1.ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் பண்டு (ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர்) 2.ஸ்ரீ. A.G. ஸ்ரீனிவாசன்
12.06.22 (ஞாயிறு)	காலை 9.30 மணி	**திருமஞ்ஜனம்** உபயம்: ஸ்ரீ. கௌசிகன்
13.06.22 (திங்கள்)	காலை 9.30 மணி இரவு 7.30 மணி	**திருமஞ்ஜனம்** **புஷ்ப பல்லக்கு** உபயம்: ஸ்ரீ. S. சுந்தரம்

Note: 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of Sri Vedantha Desikar Devasthanam)

2. In order to ensure frequent and speedier communication, please furnish your email ID. Please ignore if you have already sent.

3. Please also note that all your future correspondence will also be sent through email or SMS.









ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்









வஸந்த உத்ஸவம்











வஸந்த உத்ஸவம் – அக்ஷய த்ருதீயை



வஸந்த உத்ஸவம் – அசூய த்ருதீயை









ஸ்ரீ:



அநுகரித்தல் என்பது யாதெனின்...

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

திருவாயர்பாடியில் ஸ்ரீக்ருஷ்ணனின் லீலா சேஷ்டிதங்களில் மூழ்கி தன்னிலை மறந்திருந்த கோபர்களும் கோபியரும், அந்த மாயாவி தங்களைப் பிரிந்து சென்ற காலத்தே, அவனாகவே தம்மை பாவித்துக் கொண்டனர். பிரிவாற்றாமையால் துக்கமுற்றிருந்த கோபிகைகள் ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக் கொள்ளுமளவில், ''க்லேசப்படாதே ஸகி. இதோ நான் கண்ணன். உன்னுடனே இங்கிருக்கிறேனே'' என்பாளாம் ஒருத்தி. இன்னொருத்தியோ, ''கண்ணனைப் போல நான் அழகாக நடக்கிறேன் பார்'' என்பாளாம். மற்றொருத்தியோ கண்ணபிரான் ஆய்ச்சியரிடத்தே செய்யும் குறும்புகளை செய்து அவர்களை மகிழ்விப்பாளாம். மற்றுமொருத்தி, ''நானே கண்ணன். என் சிரிப்பு மந்தஹாசமாக இருக்கிறது பார்'' என்று சிரித்துக் காட்டுவாளாம்.

ஆயர்பாடிப் பெண்டிர் தான் இப்படி என்றால் கோபர்களோ, கண்ணன் செய்த ஸாகசங்களில் மூழ்கி, அவனாகவே தம்மை நினைத்துக் கொள்வார்களாம். ''மழைக்கு அஞ்சாதீர் ஆயர்பாடிவாஸிகளே! இதோ, நான் கோவர்தன கிரியினைத் தூக்கிப் பிடித்து உம்மையெல்லாம் காப்பேன்!'' என்பானாம் ஒருவன். மற்றவனோ, ''நான் தேனுகாஸுரனை வதம் செய்து விட்டேன்'' என்று மார்தட்டிக் கொள்வானாம்.

எம்பெருமானைப் பிரிந்து வாடுகையில், இனி ப்ராணன் தரிக்காது என்ற நிலைமையில், இவ்வாறு அநுகரித்துத் தரித்தல் என்பது வழக்கம். க்ஷீராப்திநாதனை அடைவதற்கெனகோதை நாச்சியார் ஆய்ச்சியர்களின் அனுஷ்டானத்தை அநுகரித்தாள். இத்தகைய அநுகரப் ப்ரகரணங்கள் பல நம்மாழ்வார் அருளிச் செயல்களில் ஸேவை ஆகும். அப்படி, ஒரு பெண்மகவானவள், தன்னை எம்பெருமானாகவே அநுகரித்துக்கொண்டு பேசிய விஷயங்களைக் கண்ணுற்றுக் கலங்கும் அவளது அன்னை சொல்வதாக அமைந்தது நம்மாழ்வாரின் ஐந்தாம் பத்து ஆறாம் திருவாய்மொழிப் பாசுரங்கள்.

நாராயணனே நமக்கே பறை தருவான் என்பது கோதை நாச்சியாரின் திருவாக்கு. இந்தப் பதங்களில் வரும் ஏகாரமானது உயர்வற உயர்நலம் உடையவன் **ஸ்ரீமந் நாராயணனே** என்பதை அழுந்தக் கூறும். நம்மாழ்வாரின் ஐந்தாம் பத்து ஆறாம் திருவாய்மொழி பாசுரங்களில் வரும் யானே என்ற பதமும் இதே பாணியில் அமைந்திருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவன் ந்ருஸிம்ஹனே

கடல்ஞாலம் செய்தேனும் (ஸ்ருஷ்டித்தது), **''கடல்ஞாலம் ஆவேனும்''** (ஸ்ருஷ்டிக்கப்பட்ட அனைத்தினுள்ளும் அநுப்ரவேசித்திருப்பது), **கடல்ஞாலம் கொண்டேனும்** (மஹாபலியிடத்தே யாசித்துப் பெற்றுக் கொண்டது), **கடல்ஞாலம் கீண்டேனும்** (மஹாவராஹமாகி இடந்தெடுத்து ரக்ஷித்தது), **கடல்ஞாலம் உண்டேனும்** (ப்ரளய காலத்தே உள்ளடக்கிக் கொண்டது) அனைத்தும் **யானே** என்கிறாளே எனது மகள். கடல்ஞாலத்தீசன் இவள் மேல் வந்து ஆவேசித்ததனால் இவ்வாறு இவள் பிதற்றுகிறாளா? என்னவாயிற்று என்று கேட்கும் உலகத்தோர்க்கு என் சொல்கேன் என்கிறாள் தாய்.

கற்கும் அனைத்தும் கேசவனே

கற்கும் கல்வியென் மகள் காண்கின்றனவே - இது இந்தப் பாசுரத்தின் கடைசி வரி. 'வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளும் பருவத்தில் இருக்கும் அளவு சிறியவள் எனது மகள்' என்று அந்தத் தாய் அறுதியிடும் பதங்கள் இவை.

சிறுமியான என் மகள், நான் எல்லையில்லாத அளவு கல்வி கற்றுள்ளேன் என்கிறாள் - **கற்கும் கல்விக்கெல்லையிலனே.** கற்கப்படும் கல்வியெல்லாம் நானே என்கிறாள் - **'கற்கும் கல்வி யாவேனும் யானே'.** கற்கப்படும் அனைத்து கல்வியையும் செய்தது நானே என்கிறாள் - **கற்கும் கல்வி செய்வேனும் யானே.** கற்கப்படும் கல்வி அனைத்தையும் ப்ரளய காலத்தே என்னுள் வைத்துக் கொள்வதும் நானே என்கிறாள் - **கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே.** கற்கும் கல்வி அனைத்தின் அர்த்தமும் நானே என்கிறாள் - **கற்கும் கல்விச் சாரமும் யானே.**

அனைத்துக் கல்விகளும் (சாஸ்த்ரங்கள், ஸ்ரீபாஷ்யம், ரஹஸ்யத்ரயஸாரம், ஆழ்வார் ஆசார்யர்கள் ஸ்ரீஸூக்திகள்) உணர்த்தும் எம்பெருமான் இவளுள் புகுந்ததனால் இவள் இப்படிப் பிதற்றுகிறாளோ என்று க்லேசப்படுகிறாள் அந்தத் தாய்.

காண்கின்ற அனைத்தும் கடல்வண்ணனே

காண்கின்ற என் காரிகை - உள்ளதை (பகவத் விஷயத்தை) உள்ளபடியே காண்பவள் என்று தனது மகளின் புத்தி கூர்மையினைப் பற்றிக் கூறுகிறாள் தாய். அப்படிப்பட்ட தெளிவான புத்தியினை உடையவள், காணப்படும் நிலம் - **காண்கின்ற நிலமெல்லாம்,**

பரந்து விரிந்த ஆகாசம் – **காண்கின்ற விசும்பெல்லாம்,** ப்ரகாசமான அக்னி – **காண்கின்ற வெந்தீயெல்லாம்,** வீசுகின்ற வாயுக்கள் - **காண்கின்ற இக்காற்றெல்லாம்,** ஜல தத்வம் – **காண்கின்ற கடலெல்லாம்** அவளே என்கிறாள். ஸமுத்ர வண்ணத்தினை ஒத்த அழகிய திருமேனி நிறத்தினை உடையவனான அந்தப் பரந்தாமன் எனது செல்வமகளினுள் புகுந்ததினால் அவளுக்கு உண்டான நிலை இதுவோ என்று அங்கலாய்க்கிறாள் தாய்.

செய்கின்ற அனைத்தும் கமலக்கண்ணனே

செய்ய கனிவாய் இளமான் திறத்தே - கனி போன்ற சிவந்த அதரத்தினை உடைய தன் மகள், **செய்கின்ற கிதி** - நிகழ்காலத்தில் செய்யப்படும் செயல்கள், **செய்வானின்றனகளும்** - இனி செய்யப்படப் போகின்ற செயல்கள், **செய்து முன்னிறந்தன** - ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட செயல்கள் என்று அனைத்தும் தானே என்கிறாள். செயல்களைப் புரியும் கர்த்தாக்களை ஸ்ருஷ்டிப்பதும் **செய்வார்களைச் செய்வேனும்,** அவற்றின் பலன்களை அனுபவிப்பதும் **செய்கைப் பயனுண்பேனும்** தானே என்கிறாள். அனைத்திற்கும் காரணகர்த்தாவாகும் கமலக்கண்ணன் இவள் மேல் ஆவேசித்ததனால் உண்டான நிலையோ இது?

ஓய்வில்லாமல் ரக்ஷிப்பவன் அழகிய கண்ணனே

இப்பாசுரத்தில், **திறம்பாமல்** என்ற பதமானது பல அர்த்தம் கொண்டு வருவது சிறப்பு. **திறம்பாமல் மண் காக்கின்றேன்** எனுங்கால் நீதி தவறாது என்று பொருள் கொள்ளும் இந்தப் பதம், **திறம்பாமல் மலையெடுத்தேனே** எனும் பொழுதில் சலித்துக் கொள்ளாது கோவர்தனகிரியினை சுமந்த ப்ரகரணத்தினை எடுத்துரைக்கிறது. **திறம்பாமல் அசுரரைக் கொன்றேனே** எனும் போது தவறாது என்ற அர்த்தத்தில் வரும் இந்தப் பதம், **திறங்காட்டி அன்றைவரைக் காத்தேனே** எனும் போதில் பல விதமான உபாயங்கள் செய்து பஞ்ச பாண்டவர்களைத் ரக்ஷித்தருளியதாகப் பொருள்படுகிறது.

திறம்பாமல் கடல் கடைந்தேனே என்பதில் அநாயாஸமாக என்று பொருள் கொண்டு, எம்பெருமான் கடல் கடைந்த பராக்ரமத்தைப் பாடுகிறது. இப்படித் **திறம்பாமல்** என்ற ஒரே ஒரு பதத்தினைக் கொண்டு தானே எல்லாவற்றையும் செய்ததாகக் கூறும் அடியேனது மகள், **திறம்பாத கடல்வண்ணனேற,** ஹிதஞ்சொல்லி மீட்கவொண்ணாத நிலையினை அடைந்து விட்டாளே என்று உருகுகிறாள் அவளது தாய்.

அடுத்த பாசுரத்திலும் இதே கருத்தினை வெளிப்படுத்துகிறாள் வேர்ப்படையினை ஒத்த அழகிய கண்களை உடையவளான மகள் - **இனவேற்**



கண்ணி என் மகள். இனவேய்மலை ஏந்தினேன் (கோவர்தனகிரியினை குடையாகப் பிடித்தது), **இனவேறுகள் செற்றேனும்** (கூட்டமாக வந்த எருதுகளை வதம் செய்தது), **இனவான்கன்று மேய்த்தேனும்** (கூட்டம் கூட்டமாக கன்றுகளை மேய்த்தது), **இனவாநிரை காத்தேனும்** (திரள் திரளான கோகூட்டத்தினை காத்தது), **இனவாயர் தலைவனும்** (இடையர் கூட்டத்திற்குத் தலைவனாயிருந்தது) அனைத்தும் யானே என்கிறாள் மகள். இடையர் தலைவன் வந்து அவளுள் புகுந்ததனால் உண்டான நிலை இதுவோ - **இனத்தேவர் தலைவன் வந்தேறக் கொலோ?** என்கிறாள் தாய்.

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றானவன் முகில் வண்ணன் ஒருவனே

உற்றார்களெனக்கில்லை யாரும் - மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்ற எனது வாக்கினை நம்பாது, இதர தேவதைகளிடம் சரணடைவோர் எனது உற்றார்கள் இல்லை. உற்றார் இல்லாத எனக்கு பகைவர்களும் இல்லை. இதைத்தான், உயர்வற உயர்நலம் உடையவனான எம்பெருமான் கூடாரை வெல்லும் சீர் கோவிந்தன் என்று நம்மாழ்வாரும் கோதை நாச்சியாரும் ஸேவித்தனர்.

உற்றார்கள் எனக்கிங்கெல்லாரும் - எனது திருவடிகளை சரண் புகுந்தார் அனைவரும் எனக்கு உற்றார் என்று எம்பெருமானின் பார்வையில் கூறுகிறாள் மகள். பலவிதமான ஸாச்வதமற்ற விஷயங்களைக்

காண்பித்து அனைவருக்கும் உற்றார்களை உருவாக்குவதும் நானே - **உற்றார்களைச் செய்வேனும் யானே.** எனது அடியார்களுக்கு அவிதேயமான உறவுகளை அவர்களிடமிருந்து விலக்குபவனும் நானே **உற்றார்களை அழிப்பேனும் யானே.** என்னையே அனைத்துமாக எண்ணுவோருக்கு அனைத்துமாகி நிற்பவனும் நானே - **உற்றார்களுக் குற்றேனும் யானே.**

மா சுச (கவலைப்படாதே) என்ற எம்பெருமானின் திருவாக்கிற்குக் கட்டியம் கூறுவதாய் அமைவது **உற்றார்களுக்குற்றேனும் யானே** என்ற இந்தப் பதங்கள். என்னைத் தன்னவனாக நினைப்போருடன் நான் எப்பொழுதும் இருக்கிறேன் என்று உரைத்து ஸத்யஸந்தனாக நிற்கிறான் எம்பெருமான்.

காமாஸிகாஷ்டகத்தில் ஆசார்யன் தேசிகன் இதனை ஸேவிக்கும் பாங்கிற்கு ஈடு இணை கிடையாது.

த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிமன்யை:
த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமன்யை:|

அனைத்துமானவன் ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே

அடுத்து வரும் மூன்று பாசுரங்களில் (எம்பெருமானை அநுகரித்த மகள்) அனைத்துமாய் தான் இருப்பதாகக் கூறுவது.

ருத்ரன் **முக்கண் பிரான் யானே,** ப்ரஹ்மன் **திசைமுகன் யானே,** தேவர்கள் **அமரரும் யானே** - தேவர் தலைவனாம் இந்திரன் **அமரர் கோன் யானே** மற்றும் ரிஷிகள் **"முனிவரும் யானே".** எங்கும் எப்போதும் அனைத்து உருவமாயும் நிற்பவன் நானே என்று உரைத்து, சிங்கப்பிரானாக தூணிலும் துரும்பிலும் நிறைந்து நின்ற வைபவத்தை நிஷ்கர்ஷம் பண்ணுகிறாள்.

கொடிய வினையாதும் இலனே - எம்பெருமான் கர்மாதீதன். கர்மாக்கள் ஒட்டாதவன். **கொடியவினை ஆவேனும் யானே** - கொடிய வினைகள் (கர்மாக்கள்) என்பது துஷ்டர்களை ஸம்ஹரித்து பூமிப் பிராட்டியின் பளுவைக் குறைப்பதற்கான எனது நிக்ரஹஸ்வரூபம் தான். **கொடியவினை செய்வேனும்** என்பதன் மூலம் ஆச்ரித விரோதிகளுக்கு துஷ்கர்மாக்களை உண்டாக்குவதும் நானே என்கிறாள் **கொடிய புள்ளுடையவன் ஏறிய** மகள். இங்கு புள் என்பது பெரிய திருவடியினைக் குறிக்கிறது. உன் திருவடி ஒன்றே சரண் என்று தம் அநந்யகதித்வம் உணர்ந்து சரணடையும் ஆச்ரிதர்களின் **கொடியவினை தீர்ப்பேனும் யானே. கொடியானிலங்கை செற்றேனே** என்பது எம்பெருமானது ஸத்யவாக்கிற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்தது கொடியவனான ராவணனின் லங்காபுரியினை அழித்ததும் நானே என்ற கர்மாக்களைப் பற்றின இந்தப் பதங்கள்.

கோலம் என்ற ஒரு சொல் பல பொருள்களைக் குறிப்பதாக அமையும் அடுத்த பாசுரத்தில், **கோலம் கொள் சுவர்க்கம்** (அழகிய ஸ்வர்க்கம்), **கோலம் இல் நரகம்** (கோரமான நரகம்), **கோலம் திகழ் மோக்கமும்** (பேரின்ப மயமான மோக்ஷமும்), **கோலம் கொள் தனிமுதல் யானே** (மூலப் ப்ரக்ருதியானவன்) **யானே** என்கிறான் எம்பிரான் அந்தத் தாயின் மகள் மூலமாக.

உண்ணும் சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்

கற்பது அவனையே. காண்பதில் எல்லாம் நிறைந்திருப்பது அவனே. செய்விப்பவன் அவனே. ரக்ஷிப்பவன் அவனே. அனைத்திற்கும் அதிபதியானவன் அவனே. அவனடி ஒன்றே சாச்வதம். மற்றவையெல்லாம் அநித்யம் என்ற ஸத்புத்தியை அவனே அடியோங்களுக்கு அனுக்ரஹிக்கட்டும். ❊

ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** தை மாதம் முதல் இயங்கி வருகிறது.



முகவரி மற்றும் விவரங்களுக்கு:

'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்:
044 - 4322 9401.

நிர்வாகம்:
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை - 600004.

ஸ்ரீ:

வினை தீர்க்கும் வேங்கட மாமலை

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

பரமபதத்திலே கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திற்கு அதிபதியாய் இருப்பினும் தன் பரத்வ ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு தன்னைச் சரணடையும் சேதனர்களின் மேல் கொண்ட எல்லையில்லா பக்ஷபாதத்தினால் தயையே திருவுள்ளமாய், அவர்கள் பற்றுவதற்கு ஹேதுவாய் நித்ய விபூதியில் இருந்து இற(ர)ங்கி வந்து அர்ச்சாவதாரமாக மண்ணுலகில் நித்யவாஸம் பண்ணத் திருவுள்ளம் கொண்டான் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன். கலியுகத்தின் ப்ரத்யக்ஷ தெய்வமாய் அர்ச்சாரூபியாய் முதன் முதலாக திருமலையில் ஸ்ரீநிவாஸனாக எழுந்தருளினான்.

கங்கையும் அதனிற் புனிதமான காவிரிக் கரையும் மற்றும் பல புண்ய நதிக் கரைகளும், செழிப்பான வனங்களும், காஞ்சி, மதுரா போன்ற புண்ய க்ஷேத்ரங்கள் பல இருப்பினும் எம்பெருமான் ஒரு மலையைத் தன் உறைவிடமாகக் கொள்ளக் காரணம் என்ன?


உயரமான ஒரு மலையில் இருந்து பெருகும் சுனையானது மேடு, பள்ளம் என்று பாராமல் தங்கு தடையின்றி ஓடி அம்மலையில் வாழும் தாவரங்களைச் செழிப்பாக்கி, அங்குள்ள ஜீவராசிகளின் தாகத்தைப் போக்கி உயிர் கொடுக்கும். பின் பல சுனைகள் ஒன்று சேர்ந்து ஒரு மஹாநதியாக உருவங்கொண்டு கீழே பாய்ந்தோடி நாட்டை வளமாக்கும். அதேபோல இப்பூவுலகில் ஸம்ஸாரமென்னும் கொடியதான பாலை நிலத்தில் கட்டுண்டு அவஸ்தைப்படும் சேதனர்களைத் தன் குளிர்ந்த கடாக்ஷத்தால் நனைத்து உஜ்ஜீவிக்கத் திருவுள்ளம் கொண்ட பெருமான் மிகவும் உயரமான திருமலையில் எழுந்தருளினான். தன் எல்லையில்லா தயையை ஓர் வற்றாத சுனையாகப் பெருக்கச் செய்து, அதனை தேவர், மனுஷ்யர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற ஏற்றத் தாழ்வு பாராமல் எல்லோரிடத்திலும் சமமாகப் பாயச்செய்து தன் அனுபவத்தில் நனைத்தான். தயை என்னும் சுனையுடன் ஸௌலப்யஸௌசீல்ய வாத்ஸல்யங்களைச் சேர்த்து ''அநந்யோபாயத்வம்'' என்னும் ஓர் ஒப்பற்ற ஸமுத்ரமாகப் பெருக்கி இன்றளவும் ஸம்ஸார ஸாகரத்திலிருந்து நம்மைக் ரக்ஷித்துக் கொண்டிருக்கிறான் ஸ்ரீநிவாஸன்.

இவ்வாறு அவனுகந்த, அவனுக்கு பரமப்ராப்யமான திருமலைதான் நமக்கும் பரம ப்ராப்யம்; அது நமக்கு ஒரு பலனையளிக்க வேணுமென்பதில்லை; ஒரு பலனையும் தாராதொழியினும் அதுவே நமக்கு ப்ராப்யமாகக்கடவது என்று ஆச்சர்யமாய் ஸாதிக்கிறார் நம் குருகூர்ச் சடகோபன்.

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்றுசேர் திருவேங்கட மாமலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே.

[திருவாய்மொழி 3-3-8]

கிருஷ்ணாவதாரத்தில் கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கி நின்று குளிர்ந்த பெருமழையை தடுத்தான் கண்ணன். அவனே முன்பொரு காலத்தில் த்ரிவிக்ரமனாய் மூவுலகையும் அளந்து



பெற்றான். அப்பெருமான் வந்து சேர்ந்தவிடமான திருமலையொன்றை மாத்திரமே ஆச்ரயித்தால் நமது வினைகள் யாவும் தொலைந்திடும். உள்ளே எழுந்தருளியிருக்கிறவன் தானம் வேண்டா, திருமலையாழ்வாரே போதும் என்றருளிகிறார் ஆழ்வார்.

திருவேங்கடவன் எண்ணற்ற திருக்கல்யாண குணங்களை உடையவனாயிருப்பினும் அவனுடைய மற்ற குணங்களனைத்தும் தரம் பெறுவது அவன் தயையாலேயே என்பதனை **தயா சதகம்** என்னும் ஸ்தோத்ரத்தின் மூலம் ஸ்வாமி தேஷிகன் நிர்தாரணம் பண்ணுகிறார். அப்பேர்ப்பட்ட தயையே ஒரு மலை வடிவம் கொண்டுள்ளது என்று இவ்வாறு ரஸோக்தியாக அருளிச் செய்கிறார் நம் ஆசார்ய வள்ளல்:

ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஸ்ரீநிவாஸாநுகம்பயா |
இக்ஷ்வாகுராஜவந்த்யேவ யந்மூர்த்யா சர்கராயிதம் ||

[ஸ்ரீ தயாசதகம் - 1]


அடியார்களிடத்தில் தங்கு தடையின்றி வெள்ளமிட்டு ஓடும் திருவேங்கடமுடையானின் தயையானது ஒரு கரும்பின் சாறு போன்றுள்ளது. அது அனுபவிக்க பரம போக்யமாய் இருக்கின்றது. ஸ்ரீநிவாஸனது கருணை வெள்ளமான கரும்பின் சாறு தானே ஒரு ஆறாய்ப் பெருகி, கனமாகி சர்க்கரையாகி உறைந்து கற்கண்டாக கனமாகி இன்னும் அனைவரும் அனுபவிக்க ஏற்றதாய் உள்ளது. இந்தக் கருணைதான் திருமலை வடிவம். ஸ்ரீநிவாஸனது தயை ஆற்று வெள்ளம்போல் தடையற்று அடியார்களின் மீது பெருகி அவர்கள் பாபங்களைப் போக்கி உய்விக்கிறது. இத்தகைய பெருமைகளை உடைய மலையப்பனின் தயை அசைக்க முடியாத ஒரு மாமலையாக நிற்கின்றது. இத்தகைய கருணையே வடிவான திருமலையைச் சரணமடைகின்றேன். என்று ஆழ்வார் அடியொட்டி ஸ்வாமி தேசிகன் மலையப்பனைப் பற்றாமல் மலையைப் பற்றுவது நன்கு சுவைக்கத்தக்கது.

ஸ்வாமி தேசிகன் மேலும் ஸாதிக்கிறார்:

கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு
கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு
திண்ணம் இது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்த பெருந்தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகல் இதெனப் புகழும் வெற்பு
பொன்னுலகில் போகம் எல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற்பு என விளங்கும் வேத வெற்பே.

[அதிகாரஸங்கிரஹம் - 43]

எம்பெருமானுடைய திருவடிகள் இரண்டையும் நமக்குக் காட்டித் தரும் மலை; எத்தகைய கொடிய பாபத்தையுடையவர்களின் இரண்டு கர்மங்களையும் ஒழிக்கவல்ல மலை; இதுவே பரமபதமென்று



சொல்லும்படியான பெருமையைப் பெற்ற மலை; பல புண்ய தீர்த்தங்கள் நிறைந்த மலை; புண்ணியத்தின் புகலிடமாகத் திகழும் மலை; ஸ்ரீவைகுண்டத்தில் அடையக்கூடிய பகவதநுபவம் அனைத்தையும் அளிக்கக்கூடிய மலை; நித்யஸூரிகளுக்கும் பூலோகத்தில் உள்ள பாகவதர்களுக்கும் பொதுவாய் நிற்கும் மலை; இப்பெருமைகள் அனைத்தும் உடைய மலை ஸ்ரீநிவாஸன் நித்யவாஸம் செய்யும், திருவேங்கடமென்று ப்ரகாசிக்கின்ற, வேதத்தில் போற்றப்பெற்ற திருமலையேயாகும் என்று திருவேங்கடமலையைப் போற்றுகிறார். இப்பாசுரத்தில் ஸ்வாமி தேசிகன் ஆழ்வார்களின் ஈரச்சொற்களையொட்டி திருமலையை மங்களாசாஸனம் பண்ணுவதை சில வரிகளின் மூலமாக சற்றே அனுபவிப்போம்.

கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு

பாபங்களானவை பூர்வாகங்களென்றும் உத்தராகங்களென்னும் இருவகைப்படும். எம்பெருமானைப் பற்றுதற்கு முன்பு புத்திபூர்வமாகப் பண்ணும் பாபங்கள் பூர்வாங்களாம். பிறகு ப்ரக்ருதி பாரவச்யத்தாலே ப்ராமாதிகமாக நேரும் பாபங்கள் உத்தராகங்களாம். இருவினை என்று ஸ்வாமி தேசிகன் காட்டுவது இவ்விரு பாபங்களையே.

திருவேங்கடமுடையானின் திவ்ய மங்கள ஸ்வரூபத்திலிருந்து பெருகும் ஒளியானது பரத்வத்தைத் திரியாகவும் வாத்ஸல்யத்தை நெய்யாகவும் கொண்டு ஏற்றிய தீபத்திலிருந்து பெருகும் கிரணங்கள் போன்றவை. ஸூர்ய கிரணங்களைக் காட்டிலும் உஷ்ணம் கொண்ட அவை சேதனர்களின் இருவினைகளையும் ஒழிக்கக் கூடியவை என்றருள்கிறார் நம் ஆசார்ய வள்ளல்.

வேங்கடங்கள் மெய்மேல் வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்
வேங்கடத்து உறைவார்க்கு நமவென்னலாம் கடமை
அது சுமந்தார்க்கட்கே.

[திருவாய்மொழி 3-3-6]

என்றபடி எண்ணிலடங்கா பெருமைகளை உடைய திருமலையில் வஸித்து, அலர்மேல்மங்கை உரை மார்பனான ஸ்ரீநிவாஸனுக்கு நித்ய கைங்கர்யங்கள் செய்யப்பெற்ற பாக்யத்தைப் பெற்ற பாகவதர்களின் பூர்வாகங்களும் உத்தராகங்களும் எரித்து போகும் என்று தலைக்கட்டுகிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.

கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு

ஆறெனக்கு! நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் என்று எம்பெருமானின் திருப்பாதங்களே நமக்கு உபாயம் என்று காட்டினார் ஆழ்வார். ஸ்வாமி தேசிகனோவென்னில் அத்திருத்தாள்களை நமக்குக் காட்டித்தரும் மலையே திருமலை என்று தலைக்கட்டி அம்மலையே அடியார்களுக்கு உபாயஉபேயங்களாய் நிற்பதாக ஸ்தாபிக்கிறார்.

விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு

திருமலையானது மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் பொதுவானதலமாகவும், அம்மலையிலே வீற்றிருக்கும் திருவேங்கடவன் இருதலையார்க்கும் பொதுவாய் நிற்கிறான் என்றும் அவன் பரத்வஸௌலப்யங்களை ஒன்றுசேர மங்களாசாஸனம் பண்ணுகிறார் நம் ஸ்வாமி. **மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்** என்று ஸ்வாமி திருப்பாணாழ்வாரும் **கண்ணாவானென்றும், மண்ணோர்விண்ணோர்க்கு** என்று ஸ்வாமி நம்மாழ்வாரும் பாசுரமிட்டது இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

மலையப்பன் மீது மட்டற்ற பக்தி கொண்ட மஹாவிவேகியான ஸ்வாமி குலசேகராழ்வார் திருவேங்கடமலையில் உள்ள ஒரு காட்டில் குருகு மீன் முதலிய ஜங்கமப் பொருளாகவாவது அல்லது ஆறு மரம் முதலிய தாவரப் பொருளாகவாவது பிறவியைப் பெற விரும்பினார். அப்பிறவியை பிரமன் மற்றும் இந்திரன் முதலியவர்களின் செல்வங்களைப் பெறுவதைக் காட்டிலும் மேம்பட்டதாக உணர்ந்தார். மீனாகவும் குருகாகவும் பொற்குடமாகவும் செண்பகமாகவும் ஒவ்வொரு பிறவியைப் பெற விரும்பி பாசுரமிட்ட ஆழ்வாருக்கு ஒவ்வொரு பிறப்பிலும் ஒவ்வொரு அநுபவத்தி தோன்றிக் கொண்டேயிருந்தது. கடைசியாக ஒரு பிறவியையும் தாமாக வேண்டிக் கொள்ள விரும்பாதவராய் திருமலைமேல் **ஏதேனுமாவேனே** என்று அம்மலையைக் கொண்டாடுகிறார்.

உம்பர் உலகாண்டு ஒரு குடைக்கீழ் உருப்பசி தன்
அம்பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவள வாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே.

[பெருமாள் திருமொழி 4-10]

''மேலுலகங்களையெல்லாம் ஒரு கொற்றக் குடையின் நிழலிலே அரசாண்டு ஊர்வசியினுடைய அழகிய பீதாம்பரம் அணிந்த அல்குலை அடையப் பெறினும் அதனை விரும்பமாட்டேன். சிவந்த பவழம் போன்ற திருவாயையுடையனான எனது அப்பனுடைய திருவேங்கடம் என்ற பெயரையுடைய அழகிய திருமலையின் மேல் ஏதேனுமொரு பதார்த்தமாகப் பிறக்கக் கடவேன்.'' என்கிறார். திருமலையில் ஏதாவது ஒரு பொருளாகப் பிறந்தால் ஸ்ரீநிவாஸனது கடாக்ஷமானது எப்பொழுதாயினும் க்ஷணப்பொழுதேனும் தம்மீது விழப்பெறலாம் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

திருமலையின் பெருமையையும் திருவேங்கடத் தானின் தயையையும் பேசித் தலைக்கட்ட முடியாது. அப்பெருமைகளை உடையவனின் திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகிற பெரியபிராட்டியானவள் ''ஒரு கணப்பொழுதும் பிரிந்திருக்கமாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே இருக்கிறாள். ஆழ்வார்களும் நம் தூப்புல் குலமணியும் காட்டியது போல எம்பெருமானைத் தவிர வேறொரு புகலில்லாத நாம் அவன் உகந்து நிற்கும் திருமலை சென்று சேர்ந்து அவன் திருவடிவாரத்திலே ஏதேனுமாக அந்வயிப்போம்! ❊

ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

An Overview Of Thooppul Pillai's Tamil Prabandhams (1)

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Swami Desika's literary genius has been well documented in his hundred-plus profound works and his title 'Kavi-Thaarkika Simham'. The contexts and salient features of the 28 Sanskrit hymns among these have attained reasonable awareness and familiarity and among the devotees. That many in the women folk are conversant with them is really heartening. A series of articles 'Desika Darsanam' comprising each Sthothra has been archived here.

However, in comparison, the 19 Tamil Prabandhams by the illustrious Acharya which are now available, are lesser known except mainly for the scholars and those who chant them in temples. Starting with this write-up, we shall take a brief look at them. It is relevant here to recall the traditional Thaniyan that is recited ahead of Thooppul Pillai's Prabandhams.

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

1. Amrutha Ranjani

This Prabandham is a compilation of the Paasurams that Swami Desika composed as part of 17 of his 34 Rahasyas (Esoteric works) called 'Chillarai Rahasyangal'. There was a compelling need for him to re-establish the principal tenets of Bhagavath Ramanuja's Visishtaadvaita philosophy and he did that ever so emphatically by composing these Rahasyas.

Amrutha Ranjani consists of 39 Paasurams which have been covered in 17 Rahasyas, as follows:

Sampradaaya Parisudhdhi (Paasurams 1 & 2),

Thathva Padhavi (3),

Rahasya Padhavi (4),

Thathva Navaneetham (5 & 6),

Rahasya Navaneetham (7 & 8),

Thathva Maathruka (9, 10 & 11),

Rahasya Maathruka (12 & 13),



Thathva Sandhesam (No Paasurams),

Rahasya Sandhesam (14 & 15),

Rahasya Sandhesa Vivaranam (No Paasurams),

Thathva Rathnaavali (16 & 17),

Thathva Rathnaavali Prathipaadhya Sangraham (No Paasurams),

Rahasya Rathnaavali (18 & 19),

Rahasya Rathnaavali Hrudhayam (20, 21 & 22),

Thathva-thraya Chulakam (Achethana Adhikaaram (23 & 24), Jeeva Adhikaaram (25 & 26) and Iswara Adhikaaram (27 to 30));

Rahasya-thraya Chulakam (Thirumanthra Adhikaaram (31 & 32), Dhvaya Adhikaaram (33, 34 & 35) and Charama Sloka Adhikaaram (36 to 39)) and

Saara Deepam (Luptham - Extinct).

It may be seen that the general pattern adopted is to prelude and conclude every Rahasya with a Paasuram each and the collection of these verses has come to be known as 'Amrutha Ranjani'. The literal meaning of the Prabandham is 'one which is as enchanting as Amrutham, the nectar'.

Some of the important points that are dealt with in this are: The benevolence of the Acharya, the vitality of the Triad of Truth (Achith, Chith and Iswara), the enormity of the Azhwars' and Acharyas' works, the greatness of Prapaththi , censuring of other faiths, the three kinds of Jiva — the Bhaktha, the Muktha and the Nithyasoori, favour that the Lord does to us, safeguarding ourselves from other faiths, how the Lord is both Upaaya and Upeya, the ten meanings of Dhvaya Manthra and how the Lord is an ocean of compassion.

2. Adhikaara Sangraham

Srimath Rahasya-thraya Saaram is a phenomenal treatise by Swami Desika and ranks among the four great Kalakshepa Granthas referred as the Grantha Chatushtayam (the other three are Sri Ramanuja's Sri Bhashyam and Gita Bhashyam, and commentary on Thiruvoymozhi known as Bhagavath Vishayam). It comprises 32 chapters (Adhikaarams) and the gist of the master piece has been given in the previous Note.

Adhikaara Sangraham is basically a collection of the Tamil verses forming part of the 32 chapters of Srimath Rahasya-thraya Saaram. This Prabandham starts with salutation to the Azhwars and Acharyas. The central part consists of the Paasurams from the 32 chapters of the Srimath Saaram. The final part has verses on Kanchi, Srirangam, Thiruvenkatam and the Mudhal Azhwars, followed by one glorifying the feet of Lord Ranganatha, and concludes with a Paasuram dedicated to Lord Hayagriva.

3. Amruthaa Swaadhini

This is another Prabandham (comprising 37 Paasurams) forming part of the Chillarai Rahasyangal. The esoteric works covered in this are:

Saara Saaram —

Thirumanthra Adhikaram (Paasurams 1 to 6),

Dhvaya Adhikaram (7, 8 & 9) and

Charama Sloka Adhikaram (10 to 14),

Abhaya-Pradhaana Saaram (15 to 19),

Rahasya Sikhamani (20 to 23),

Anjali Vaibhavam (24),

Pradhaana Sathakam (25, 26 & 27),

Upakaara Sangraham (28, 29 & 30),

Saara Sangraham (31),

Virosha Parihaaram (32, 33 & 34) and

Munivaahana Bhogam (35, 36 & 37).

The Chillarai Rahasyangal-connect and fact that this is also nectar-like in nature has lent this Prabandham an 'Amrutha' name. Starting with the three most significant tenets of the visishtaadvaita philosophy — the Thirumanthram, Dhvayam and Charama Sloka — it goes on to emphasise the Doctrine of Surrender in reference to the Kakasura and Vibheeshana Saranagathi. The meaning of the Varaha Charama sloka is explained in verse No. 22, while the greatness of the folded hands is highlighted in verse No. 24. In a course of an imaginative and novel conversation, Paasuram No. 33 of lilting grandeur brings out the magnificence of Bhagavath Ramanuja. The Prabandham draws to a close with a brief account of 'Amalanaadhi Piraan' of ThirupPaan Azhwar, a favourite of Swami Desika.

Our great Acharya's reverence for the Azhwar is evident from the fact that in both the references in the Prabandham, the term 'Paan Perumaal' has been used. It is relevant to note here that In Adhikaara Sangraham, the Azhwar is referred as "Paana Nathan".

The other esoteric works of Swami Desika that are independent of the Chillarai Rahasyangal and for which there are corresponding Prabandhams are: Adhikara Sangraham, Paramapadha Sopanam, Paramatha Bhangam and Mei Viratha Maanmiyam. Of the Amruthaa Swaadhini Rahasyas, Thathva Sikhamani and Madhurakavi Hrudhayam are extinct (Luptham).

(To be continued...)



சித்ரா பௌர்ணமி உத்ஸவம்










ச்ரவணம்





பஞ்சபர்வ உத்ஸவம் - அமாவாசை







வெள்ளிக்கிழமை உத்ஸவம்

